**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.301/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW-18 | Taluk | : | |
| Name | : | திரு.முருகேசன் | Occupation | : | |
| Father Name | : | திரு.மலையாளன் | Age | : | 59 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 16.10.25.**

Both accused absent. U/sec.355 BNSS petition filed and allowed.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது தஞ்சாவூர் மனிதஉரிமைகள் மற்றும் சமூக நீதி பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.4.2022 ஆம் தேதி 20.15 மணிக்கு நான் கபிஸ்தலம் காவல்நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது பட்டுகுடியை சேர்ந்த சந்திரசேகரன் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான புகார் ஒன்றை என்னிடம் கொடுத்தார் அதை நான் வாங்கி படித்து பார்த்தேன். தற்போது என்னிடம் காண்பிக்க படும் அ.சா.ஆ.1 தான் அது. பின்பு நான் அதன் அடிப்படையில் எங்கள் காவல்நிலைய கு.எண் 200/22 ச.பிரிவுகள். 294பி, 302 இதச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். மேற்படி ஆவணத்தை காவல் ஆய்வாளர் விசாரணைக்கு வைத்தேன் மற்றும் பாபநாசம் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அசல் புகார் மற்றும் முதல் தகவல்அறிக்கை இணைத்து காவலர் மூலம் அனுப்பிவைத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் முதல்தகவல்அறிக்கை அதுதான் அது **அ.த.சா.ஆ.10** ஆகும். இந்த வழக்கு தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். முதல்தகவல் அறிக்கை நகலை மேற்படி புகார்தாரர் சந்திரசேகர் என்னிடம் கையெழுத்து போட்டு கொடுத்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

அன்று நான் சொல்லக்கூடிய நேரத்தில் ஆய்வாளர் நிலையத்தில் இருந்தாரா என்றால் வெளிபணியில் இருந்தார். அன்று எத்தனை மணிக்கு ஆய்வாளர் நிலையம் திரும்பினார் என்றால் இரவு சுமார் 21மணி இருக்கும். முதல் தகவல் அறிக்கை பாபநாசம் நீதிமன்றத்தில் 21.4.2022 மதியம் 12.15 மணிக்கு பெறபட்டது என்றால் ஆமாம். எங்களுடைய காவல்நிலையத்திற்கும் பாபநாசம் நீதிமன்றத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 5கி.மீ இருக்கும். என்னால்பதிவு செய்யபட்ட முதல் தகவல் அறிக்கை ஆய்வாளருக்கு கோப்பு வழங்கிய பின்பு நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டதா என்றால் ஆமாம். காவலரிடம் கொடுத்து நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பியபோது நேரம் எவ்வளவு என்றால் ஞாபகமில்லை. என்னால் பதிவு செய்யபட்ட முதல் தகவல் அறிக்கை என்பது வழக்கிற்கு ஏற்றவாறு பின்னால் தயார் செய்யபட்டது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.